Nallar Branch Library

# ஆறு ராணுவம் உடல்சிதறிபலி

Registered as a Newspaper in SriLanka. விலை ரூபா ஒன்று

ஈழமுரசு

முரசு 3 12-8-86 செவ்வாய் (ஆடி 27 துல்ஹஜ 5) முழக்கம் 189

## கிரானில் கண்ணிவெடி

### மேலும் ஐவர் படுகாயமுற்றனர்

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள வாகரை என்ற இடத்தில் நேற்று போராளிகள் நடத்திய நிலக்கண்ணிவெடித் தாக்குதலொன்றில் ஆறு இராணுவத்தினர் ஸ்தலத்திலேயே மரணமடைந்தனர். படுகாயமடைந்த மேலும் ஐந்து ராணுவத்தினர் விமானம் மூலம் கொழும்பு கொண்டு செல்லப்பட்டனர். வாகரையிலிருந்து வடக்கே இரண்டு மைல் தொலைவில் இக் கண்ணிவெடித் தாக்குதல் நேற்று முற்பகல் பதினொரு மணியளவில் இடம்பெற்றது. இரண்டு ராணுவ வாகனங்கள் ஒன்றன் பின் ஒன்ருக ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தபோது கண்ணிவெடி வெடித்தது. ஒரு ராணுவ வாகனம் சுக்கு நூருகி, அடையாளம் காணமுடியாதவாறு சிதறிக் கிடந்ததாக தெரிவிக்கப்பட்டது. இத்தாக்குதலுக்கு —6ம் பக்கம் பார்க்க

★ கல்முனையில் 48 மணி நேரமாக தொடர் தாக்குதல்

# தமிழர்கடைகள், வீடுகள், மில்கள் தீக்கிரை; ஆறு பேர் மரணம்!

## சுமார் 50 பேரை காணவில்லை; 5,000 தமிழர் அகதிகளாயினர்

(மட்டுநகர்)

கடந்த நாற்பத்தெட்டு மணித்தியாலங்களில் கல்முனையில் தமிழருக்குச் சொந்தமான ஐம்பதுக்கும் அதிகமான கடைகளும், வீடுகளும் எரிக்கப்பட்டதாகவும், சில அரிசி மில்களும் சேதப்படுத்தப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. மரணமான தமிழரின் தொகை ஆருக அதிகரித்துள்ளதாகவும், ஐம்பதுக்கும் அதிகமானவர்களைக் காணவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது.

நேற்று முன்தினமிரவு ஊரடங்குச் சட்டம் அமுலிலிருந்த பன்னிரண்டுமணி நேரத்திலேயே மோசமான தாக்குதலை ஆயுதபாணிகளான கோஷ்டிகள் மேற்கொண்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

நேற்று முன்தினம் கடத்திச் செல்லப்பட்ட இருவர்த்தகர்களைப் பற்றிய தகவலெதனையும் பெற முடியவில்லையெனவும் கூறப்பட்டது.

நேற்று முற்பகலும் இரண்டாம், மூன்றாம் குறிச்சிகளில் தொடர்ந்து தாக்குதல்கள் இடம்பெற்றன.

சுமார் ஐயாயிரத்துக்கும் அதிகமான தமிழர்கள் இங்குள்ள பாடசாலையிலும், ஆலயங்களிலும் அகதிகளாகத் தஞ்சம் புகுந்துள்ளனர்.

கல்முனையின் பிரபல முஸ்லிம் —6ம் பக்கம் பார்க்க

## கடந்த பத்து நாட்களில் 33 தமிழர்கள் படுகொலை

வடக்குக் கிழக்கு மாகாணங்களில் இம் மாதத்தின் முதல் பத்து நாட்களில மொத்தம் முப்பத்து மூன்று தமிழர்கள் கொலை செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு: 7, திருமலை: 5, முல்லைத்தீவு: 1, யாழ்ப்பாணம்: 5, மன்னார்: 3, வவுனியா: 6, அம்பாறை: 2 (அம்பாறையிலுள்ள கல்முனையில் மேலும் நால்வர் நேற்று முன்தினமிரவு கொல்லப்பட்டனர்.)

இத்தகவலை பிரஜைகள் குழுக்களின் இணைப்புக் குழுவின் அழைப்பாளர் திரு. எஸ். சிவானந்தராஜா வெளியிட்டுள்ளார்.

## பி. பி. ஸி. நிருபர் சென்னை பயணம்

விஸா மறுக்கப்பட்ட பி. பி. ஸி. யின் கொழும்பு நிருபர் திரு. ஹம்ப்ரி ஹோக்ஸ்லி நேற்று விமானமூலம் சென்னை பயணமானர்.

ஷெல் அடி

## நான்காவது நபரும் மரணம்

கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்நகரில் நடந்த ஷெல் தாக்குதலின்போது படுகாயம —6ம் பக்கம் பார்க்க

## சம்பந்தமூர்த்தியின் தந்தை 10 நாட்களின் பின் விடுதலை

செங்கலடியில் விடுதலைப் புலிகள் இயக்கத்தினுல் கடத்திச் செல்லப்பட்ட கூட்டணிப் பிரமுகர் சம்பந்தமூர்த்தியின் தந்தையான சின்னத்தம்பி (80) நேற்றிரவு ஏழு மணியளவில் விடுதலை செய்யப்பட்டார்.

அமைச்சர் தேவநாயகம் கடந்த மாத இறுதியில் கல்குடா — 6ம் பக்கம் பார்க்க

யாழ்நகரில் நேற்று

## ஹெலியிலிருந்து திடீரென காலை வேளையில் நடந்த சூடு

நேற்றுக் காலை பத்துமணி போல் கோட்டையை நோக்கி வந்து கொண்டிருந்த ஹெலிகொப்டர் ஒன்று சத்திர சந்தியை அண்மித்ததும் திடீரென துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டது. சத்திரசந்தியிலிருந்து கொட்டடிச் சந்திவரை சில நிமிட நேரம் தொடர்ச்சியாக இத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இச் சம்பவத்தினுல் அமைதியாகவிருந்த யாழ்நகர் பரபரப்படையத் தொடங்கியது. திறந்திருந்த கடைகள் அனைத்தும் மூடப்பட்டன. தாக்குதல்கள் மேலும் தொடரலாமென எதிர் பார்க்கப்பட்டதினுல் போராளிகளும் தயார் நிலை —6ஆம் பக்கம் பார்க்க

ராஜீவின் நம்பிக்கை

## இனப்பிரச்சினைத் தீர்வில் பெருமளவு முன்னேற்றம்

(புதுடில்லி)

இலங்கை இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதில் பெருமளவு முன்னேற்றம் காணப்படுவதாக பிரதமர் ராஜீவ் காந்தி நேற்று செய்தியாளரிடம் நம்பிக்கை தெரிவித்தார்.

பிரிட்டன், மெக்ஸிக்கோ ஆகிய நாடுகளுக்கு விஜயம் செய்த பின்னர் நேற்று நாடு திரும்பிய அவர் புதுடில்லி விமான நிலையத்தில் செய்தியாளரிடம் பேசினர்.

இப் பிரச்சினைக்கு ஒரு நல்ல முடிவு ஏற்படும் எனத் தாம் நம்புவதாகச்சொன்ன பிரதமர் அண்மையில் தமிழர் விடுதலைக் —6ஆம் பக்கம் பார்க்க

## பல்கலைக்கழக மாணவர் நான்காம் நாளாக மறியல்

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் நேற்று நான்காவது நாளாக தமது பகிஷ்கரிப்பு மறியல் போராட்டத்தினை தொடர்ந்து நடாத்தினுர்கள். அண்மையில் 'ருக்கிங்' சம்பவம் ஒன்றினை தொடர்ந்து மாணவர்களினுல் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஒன்பது கோரிக்கைகளையும் பல்கலைக்கழக நிர்வாகம் ஏற்று நடைமுறைப்படுத்த வேண்டுமென கோரியே மாணவர்கள் இப்போராட்டத்தினை நடாத்தி வருகின்ருர்கள்.

மாணவர்களின் மறியல் போராட்டம் பல்கலைக்கழக பிரதான அலுவலகத்தின் முன் ...6ஆம் பக்கம் பார்க்க

# யாழ்.பல்கலைகழகத்துள் அந்நிய உளவு நிறுவனம் ஊடுருவியுள்ளது! பரு.பிரஜைகள்குழு எச்சரிக்கை

யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெறும் பகிஷ்கரிப்பு தொடர்பாக மாணவர்கள் தாம் முன்வைத்திருக்கும் கோரிக்கைகள் நிறைவேற்றப்படாவிடின் தம்மைத் தென்னிலங்கையிலுள்ள பல்கலைக்கழகங்களுக்கு மாற்றுமாறு கோரிக்கைவிட்டுள்ளனர். இதிலிருந்து இங்குள்ள பல்வேறு சமூகங்களுக்கிடையேயும் நிலவிவரும் பூரண புரிந்துணர்வையும், ஐக்கியத்தையும் குலைக்கும் அந்நிய உளவு நிறுவனமொன்று இந்த மாணவர் ஊடாக காலடி வைத்துள்ளது என்று தெரியவந்துள்ளது என பருத்தித்துறை பிரஜைகள் குழு நேற்று விடுத்த அறிக்கையொன்றில் சுட்டிக்காட்டியுள்ளது.

தெரிந்தோ தெரியாமலோ இந்த மாணவர்கள் இந்தச் சதியில் இரையாகிவிட்டனர். இந்த அபாயகரமான நிலையைப் புரிந்து கொண்டு தமிழினத்தைச் சீரழிக்காது உடனடியாக சகல மாணவர்களும் பகிஷ்கரிப்பைக் கைவிட்டு, இச் சதிமுயற்சியை முறியடிக்க —6ம் பக்கம் பார்க்க

## விளையாட்டு சங்கம்

(புங்குடுதீவு)

புங்குடுதீவில் விளையாட்டுத் துறையை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் விளையாட்டுச் சங்கம் ஒன்று அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது. புங்குடுதீவு மகா வித்தியாலய மண்டபத்தில் கடந்த வியாழக்கிழமை தீவுப்பகுதி தெற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவு விளையாட்டு அதிகாரி திரு. கு. பீலிக்ஸ் தலைமையில் இவ்வங்குரார்ப்பணக் கூட்டம் நடைபெற்றது.

## பாவலையாளர் சங்கம்

(வேலணை)

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவு பிரதேச பாவனையாளர் சங்கத்தின் அங்குரார்ப்பணக் கூட்டம் ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் உதவி அரசாங்க அதிபர் திரு. க. பாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றது.

மேற்படி சங்க வேலைகளைப் பற்றி தலைவரும், யாழ். விலைக் கட்டுப்பாட்டு பிரதேச அதிபர் திரு ந. இரத்தினமும் விளக்கி கூறிய பின் சங்க புதியநிர்வாகிகளாக பின்வருவோர் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் திரு. க. பாலசுப்பிரமணியம், (காவலூர் உதவி அரசாங்க அதிபர்) செயலாளர்: திரு வி.க. காராளசிங்கம், உப செயலாளர் திரு.கே.எஸ். நடராசா, பொருளாளர் திரு. மு. விஜயரத்தினம் திரு. பி. சபாரத்தினசிங்கம், திரு. ஆர்.எஸ். யேம்ஸ், திரு. கே. சாம்பமூர்த்தி ஆகியோர் நிர்வாக உறுப்பினர்களாகவும் தெரிவு செய்யப்பட்டனர்.

## வருடாந்த திருநாள

(குருநகர்)

யாழ். கட்டைக்காடு புனித கப்பலேந்தி மாதா கோவில் வருடாந்த திருநாள் கொண்டாட்டங்கள் இபபோது நடைபெற்று வருகின்றன.

நாளாந்தம் மாலை ஆறு மணிக்கு வழிபாட்டுத் திருப்பலிக்ள் ஒப்புக் கொடுக்கப்படும். 14-ந் திகதி வியாழக்கிழமை மாலை நற்கருணை ஆராதனையும், சுற்றுப்பிரகாரமும் நடைபெறும்.

15-ந் திகதி வெள்ளிக்கிழமை காலை தாளையடி பங்குக் குரவர் அருட்திரு மைக்கல் சௌந்தரநாயகம் அடிகளால் திருநள் பாடற்திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு புனித கப்பலேந்தி மாதா திருச்சொரூப ஊர்வலமும், ஆசீர்வாதமும் வழங்கப்படுவதுடன் வருடாந்த திருநாள் கொண்டாட்டம் நிறைவடையும்.

## திருக்குறள் ஐக்கிய நாணய சங்கம்

கந்தர்மடத்திலுள்ளவை.எம் டி.ஏ.பணிமனையில் கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு.எஸ் ஞானப்பிரகாசம் அவர்களால் திருக்குறள் ஐக்கிய நாணய சங்கம் தொடககிவைககப்பட்டது. பொறியியலாளர் ஏ. என். யோகநாதன் கூட்டத்திற்குத் தலைமை வகித்தார்.

திரு.எஸ். ஞானப்பிரகாசம், எப்படி மக்களின் சேமிப்பு இச்சங்கம் மூலம் பயன் அளிக்கும் என்பதை முன்பு நிறுவிய மற்றைய சங்கங்களின வளர்ச்சியை விபரமாக புள்ளி விவரங்களுடன் எடுத்துரைத்தார். ஒவ்வொரு பகுதி மக்களின் சேமிபபு அப்பகுதி மக்களுக்கு பயன்பட வேணடுமென்பதை வலியுறுத்தினர். இப்பொழுது நிலவும் நெருக்கடியான கால கட்டத்தில மக்கள் வங்கிகளுக்குப் போய் கடன் எடுக்கமுடியாத நிலையில் இருக்கையில், ஐக்கிய நாணய சங்கம் மூலம் சிரமமின்றிக் கடன்பெற வழி வகுக்கும் எனவும் விளக்கினர்.

திரு.ஏ .என். யோகநாதன் பேசுகையில்200 ஆண்டுகளுக்கு முன்பே வள்ளுவப் பெருந்தகை பொருளின் முக்கியத்துவத்தை திருக்குறளின்பொருட்பாலில் பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல்லை என்று தெளிவாகக் கூறிவிட்டார். அறத்துப்பாலிலும் பார்க்க பொருட்பாலுக்கு இருமடங்கு அதிகாரங்களை ஒதுககி பொருளின் முக்கியத்துவத்தை வலியுறுத்தியுள்ளார். தமிழருடைய வேதமாகிய திருககுறளில் கூறிய அறத்தின் படி வாழ்ந்து,பொருளைஈட்டி, இன்பமாக வாழ ஆடம்பரயான செலவுகளைககுறைத்து,சேமிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

கீழ்க்கண்ட உத்தியோகஸ்தர்கள் ,ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டனர் தலைவர்: ஏ. என். யோகநாதன் உப தலைவர்: சட்டத்தரணி எஸ். தியாகராசா செயலாளர்: செல்வி மேகலா பொன்னுத்துரை பொருளாளர்: டாக்டர் தி. பரமசிவம், செயற்குழு உறுப்பினர் க. அரசலிங்கம் திரு. க. தனகரெத்தினம் திருமதி கே. சிவானந்தராசா.

## ஆண்டு விழா

(நல்லூர்)

சுன்னுகம் கிறிஸ்தவ சேவா ஆச்சிரமத்தின் ஆண்டு விழா இம் மாதம் 21ந் திகதி வியாழக்கிழமை ஆச்சிரமத்தில் நடைபெறவிருக்கிறது. ஆண்டு விழாவிற்கான ஏற்பாடுகளை ஆச்சிரம பிரதம சேவக் அருட்திரு. சாம் அல்பிரட் அடிகளார் செய்துள்ளார்.


## பிரயாண ஒழுங்குகள்

- கனடா
- சவூதி அரேபியா
- ஈராக்

1. கனடா செல்ல விரும்புவோர்க்கு ஓர் அரிய சந்தர்ப்பம். எமது முகவர் உங்களை கனடாவிற்கு நேரடியாக அழைத்துச் செல்வார். செல்ல விரும்புவோர் 17ம் திகதிக்கு முன்பதாக தொடர்பு கொள்ளவும்.
2. சவூதி அரேபியாவுக்கு விவசாய தொழிலாளர் (Labours) வேலைக்குச் செல்ல விரும்புவோர் 19ம் திகதிக்குப் பிந்தாமல் பாஸ்போட், 6 படங்களுடன் நேரில் தொடர்பு கொள்ளவும்.
3. ஈராக் நாட்டில் (Hospital Cleaners) ஆஸ்பத்திரி கிளீனர்ஸ் வேலைக்குச் செல்ல விரும்புவோர்க்கு மிகவிரைவில் செல்ல ஒழுங்குகள் செய்து தரப்படும். விரும்புவோர் பாஸ்போட், 6 படங்களுடன் தொடர்பு கொள்ளவும். பாஸ்போட், பொன்ட் ஆகியவையும் செய்து கொடுக்கப்படும்.

தொடர்பு:

**N. BALA**
திருச்செல்வம் வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

பி. குறிப்பு:
பஸ் வழி இல;-
764, பலாலி வீதி,
கோண்டாவில். R/24664


## வரி விளம்பரம்

### தவறிவிட்டது

எனது சிறைச்சாலைத் திணைக்களத்தினுல் வழங்கப் பட்ட அடையாள அட்டை சென்ற வியாழக்கிழமை தவறிவிட்டது அதை எடுத்தவர்கள் கீழ்க் குறிப்பிட்ட விலாசத்திற்கு தயவு செய்து அனுப்பிவைக்கவும் (பெயர் சிங்களத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது)பிரான்சிஸ் சேவியர், சிறைச்சாலை திணைக்களம், பழைய பூங்கா வீதி, யாழ்ப்பாணம்.

A/24672

## தட்டுப்பாடு

(புங்குடுதீவு)

யாழ். மாவட்டத்தில் விதை நெல்லுக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது, வெளி மாவட்டங்களிலிருநது விதை நெல்லைத் தருவிப்பது சாத்தியமில்லையெனத் தெரிவிக்கப்படுகிறது.

விதை நெல் வைத்திருக்கும் விவசாயிகள் தங்களிடமுள்ள விதை நெல்லை மற்றைய விவசாயிகளுக்கும் பகிர்ந்தளிக்க முன்வர வேண்டுமென விவசாயப்பகுதியினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

ஊர்காவற்றுறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் விவசாயிகளுக்குத் தேவைப்படும் விதை நெல்லைப் பெற்றுக் கொடுக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது.

## மின் விநியோகம் சீரானது

(வேலணை)

மின்சார ட்ருஸ்ஸ் போமர் ஒன்று அதிக மின்பளு காரணமாக எரிந்து விட்டதனுல் கடந்த ஒரு மாத காலத்திற்கு மேலாக தடைப்பட்டிருந்த அல்லைப்பிட்டிக் கிராமத்திற்கான மின்சார விநியோகம் இப்போது மீண்டும் நடைபெறுகின்றது.

புதியசக்தி வாய்ந்த ட்ருன்ஸ் போமர பொருத்தப்பட்டதனுல் மீண்டும் இவ்வாரம் மின்சாரம் கிடைக்கத் தொடங்கியுள்ளது.

## பிறந்தநாள் வாழ்த்து

பண்டத்தரிப்பு குமாரசிங்கம் கனகேஸ்வரி தம்பதியின் மகள் கார்த்தியாயினி இன்று தனது பன்னிரண்டாவது பிறந்த நாளை கொண்டாடுகிறுர்.

புங்குடுதீவு விசாகரத்தினம் வசந்தாதேவி தம்பதியின் மகன் ஜெனுளன் இன்று தனது ஆறுவது பிறந்த நாளை கொண்டாடுகிறுர்.

## தேவை

யாழ்நகரில் பிரபல நிதி அமைப்பொன்றில் உயர் பதவியில் கடமையாற்ற விரும்பும், எதாவது வங்கியிலோ அன்றி நிதி நிறுவனங்களில் கடமையாற்றி அனுபவம் பெற்றவர்கள் எதிர்வரும் சனிக்கிழமை (1986.08.16) காலை 10.00 மணிக்கு 81/1, கே. கே. எஸ். வீதி, கொக்குவில் என்ற முகவரியில் சமுகமளிக்கவும்.

ஆய்வு நிறுவனம்,
81/1, கே கே. எஸ். வீதி,
கொக்குவில். 1986 08.11.

ந. பரராஜசிங்கம்
பணிப்பாளர்.

R/24673


## மத்திய கிழக்கில்

## உடனடி வேலைவாய்ப்பு ஒழுங்குகள்

1. குவைத்
   WAITERS, COOKS, ASSISTANT KITCHEN MANAGERS. (ஓரளவு ஆங்கில அறிவுடையவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.
2. சவூதி அரேபியா
   GFNERAL HELPERS / CLEANERS, DRIVERS, HARBOUR LABOURERS (துறைமுகத் தொழிலாளர்கள்)
3. ஈராக்
   CARPENTERS, MASONS, LABOURERS.

பெரும்பாலான பதவிகளுக்கு மாத இறுதியளவில் பயணம் செய்வதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப் படுகின்றன. சொற்ப வெற்றிடங்களே உண்டு. விபரங்களுக்கு 14ஆம் திகதிக்கிடையில் தொடர்பு கொள்ளவும். (காலை 10.00 — மாலை 3.00 மணிக்கிடையில்)

எஸ். அன்ரன் முத்துக்குமரன்
119 1/1, கே. கே. எஸ். வீதி,
(மைலன் கட்டிட மேல்மாடி)
யாழ்ப்பாணம்.

R/24674



## ★ ஆவணி இதழ் விற்பனையாகிறது! ★

# அமிர்த கங்கை

நல்லையோன் வள்ளிதெய்வயானையுடன் நல்லன்பர்
அல்லல் அகலக் கொடியேற — செல்வ
இலக்கிய நங்கை அமிர்தகங்கை யோடும்
உலா வந்தாள் உண்மை ஒளி.

★ நல்லை முருகன் ... ஆப்செட் அட்டைப் படம்

★ யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தமிழ்மன்றம் நடாத்திய

குறுநாவல் போட்டி -- பரிசு நாவல்

★ சிறுவர்க்கான முழு நவீனம்

★ இம்மாத ராசிப் பலன் பக்கங்கள்
மற்றும்

★ சிறு கதைகள், கவிதைகள், தொடர் கதைகள், கட்டுரைகள், துணுக்குகள்

விலை ரூபா 5/- மட்டுமே

# ஒரு வீதியில் கேவல நிலை; கவனிக்க அதிகாரிகள் இல்லை

(வயாவிளான்)

ஆவரங்கால் சந்தியில் இருந்து அச்சுவேலி-தொண்டமானாறு வீதி மிகப் பெரும் குன்றும் குழியுமாகக் காட்சியளிக்கின்றது.

யாழ்- பருத்தித்துறைப் போக்குவரத்து இப்பாதையூடாகவே மேற்கொள்ளப்படுவதனல் தனியார் பஸ்கள் போக்குவரத்துச் சபையின் பஸ்கள், தனியார் வாகனங்கள் அடிக்கடி இப்பகுதியில் பழுதடையும் நிலை ஏற்பட்டுள்ளது.

அச்சுவேலி லயன்ஸ் கழகம், பிரஜைகள் குழு, தனியார் போக்குவரத்துச் சங்கம் என்பன இதுபற்றி சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும், அரசாங்க அதிபருக்கும் முறையிட்டும் எவ்வித திருத்தமும் மேற்கொள்ளப்படவில்லை.

யாழ். குடாநாட்டின் பல பகுதிகள் திருத்தமுறும் இவ்வேளையில் இப்பகுதி மட்டும் புறக்கணிக்கப்படும் நிலையால் மக்கள் விரக்தியடைந்துள்ளனர்.

மழைகாலம் அண்மித்தமையினல் இப்பகுதிப் போக்குவரத்து மேலும் பாதிக்கப்படலாமென அஞ்சப்படுகின்றது.

இதுசம்பந்தமாக அச்சுவேலி லயன்ஸ் கழகம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை மீண்டும் நேரில் சந்திக்கவுள்ளதாக கழகச் செயலாளர் திரு. மு. சிவஞானம் தெரிவித்தார்.

### அஞ்சலிக் கூட்டத்தில் உரை:

# தோழர் ஜெயம் அழியாப் புகழ்பெற்ற மூத்த சமதர்மவாதி!

(வல்வெட்டித்துறை)

"கடந்த காலங்களின் சாதித் தகர்ப்புக் காவலன் தோழர் ஜெயம் அவர்கள் தான் என்பதை அன்றைய தலைமுறையினர் முதற்கொண்டு இன்றைய முற்போக்குவாதிகள்வரை யாரும் மறுக்கவோ, மறைக்கவோ முடியாது. சங்கங்கள் என்ற ஸ்தாபனங்களை அமைக்க முன்னின்று உழைத்த முற்போக்காளர் மட்டுமல்ல ஸ்தாபகரும் அவரே."

இவ்வாறு, வடபகுதி இடதுசாரி இயக்கத்தின் முன்னேடியான அமரர் செ. தர்மகுலசிங்கம் (ஜெயம்) அவர்களின் நினைவு தினத்தையும், 1953ம் ஆண்டு ஹர்த்தால் ஞாபக தினத்தையும் நினைவுகூரு முகமாக, தேவரையாளி இந்துக் கல்லூரி அருகாமையிலுள்ள மைதானத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்திற்கு தலைமை வகித்துப் பேசிய தோழர் சி. மாசிலாமணி குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து தமது உரையில், தோழர் ஜெயம், அன்று நினைத்திருந்தால், சிங்களத் தோழர்களின் நட்பு மூலம் அவர் ஒரு நியமன எம். பியாகவோ அல்லது ஒரு மந்திரியாகவோ வந்திருக்க முடியும். செல்வந்த பரம்பரையில் பிறந்து, செல்வந்தனாக இருந்த பொழுதிலும், ஒரு பாட்டாளியாக, பாட்டாளி வர்க்கத் தொண்டனாகவே வாழ்ந்து காட்டினார். அப்படியே மடிந்தும், இன்றும் பாட்டாளிகளின் நினைவில் அழியாப் புகழ்பெற்று வாழ்ந்து கொண்டிருக்கிறார்" என்றார்.

த. சிதம்பரப்பிள்ளை அவர்கள், தர்மகுலசிங்கம் அவர்களின் சிறந்த பண்பினை, அரசியல் ஞானத்தை, ஏழைகளுக்காக இரங்கும் சிந்தையை பாராட்டிப் பேசுகையில் "சிறுபான்மை மக்களின் விடுதலைப் போராட்டங்களுக்காக வாழ்ந்தவர் தியாகச் செம்மல் திரு. செ. தர்மகுலசிங்கம் அவர்கள். உண்மையான சோஷலிஸவாதியாக உழைத்த அவர் பல போராட்டங்களைக் கண்டு அரச காவல்துறையினரின் பொல்லடி, கல்லடிகளுக்கும் ஆளானர்" என்றார்.

# கல்விக் கண்காட்சியால் செயல் முறைக்கு வாய்ப்பு

(புங்குடுதீவு)

"செய்து கற்றல் கல்வித் தத்துவத்தில் சிறப்பிடம் பெறுகிறது. கல்விக் கண்காட்சிகள் இச் செய்து கற்றல் முறைக்கு வாய்ப்பளிக்கின்றன. புங்குடுதீவு கல்வி வட்டாரத்திலேயே முதன் முதலாகச் சிறந்த கல்விக் கண்காட்சியை இங்கு ஏற்பாடு செய்துள்ள அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவரையும் யான் மனமாரப் பாராட்டுகிறேன். ஏனைய பாடசாலைகளுக்கு ஒரெடுத்துக்காட்டாக இவ்வித்தியாலயம் விளங்குவது மகிழ்ச்சிக்குரியது".

இவ்வாறு புங்குடுதீவு வட்டாரக் கல்வியதிகாரி திரு. க. இ. ஆறுமுகம் புங்குடுதீவு ஸ்ரீ கணேச மகாவித்தியாலயத்தின் கல்விக் கண்காட்சியின் இரண்டாம் நாள் வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பேசுகையில் குறிப்பிட்டார்.

வித்தியாலய அதிபர் திரு. த. துரைசிங்கம் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் திரு. ஆறுமுகம் தொடர்ந்து பேசுகையில் மாணவர்களின் கல்வி விருத்தியில் பெற்றோர், ஆசிரியர் கொண்டுள்ள ஆர்வத்தை இப் பொருட்காட்சியின் மூலம் நன்குணரமுடிகிறது. யாழ். கல்விப்பணிப்பாளர் கல்விப்பொருட்காட்சியை ஒழுங்கு செய்ததன் மூலம் யாழ். மாவட்டப் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் மத்தியில் புதியதோர் புத்துணர்ச்சியை ஏற்படுத்தியுள்ளார். இதன் பிரதிபலிப்பினை நாம் இன்று கண்ணுறக் காண முடிகிறது" என்றார்.

# அதிகாரம் கிடைத்தது

(வேலணை)

யாழ். மாவட்ட அபிவிருத்திச் சபையின் நாரந்தனை உப அலுவலகத்தால் நடத்தப்படும் ஆயுர்வேத வைத்திய சாலைக்கு உள்ளூரிலேயே உற்பத்தி செய்யப்படும் சித்த, ஆயுர்வேத மருந்துகளை கொள்வனவு செய்வதற்கான அதிகாரத்தை யாழ். மாவட்ட அபிவிருத்திச் சபையினர் வழங்கியுள்ளனர்.

இதன்படி தமக்குத் தேவையான மருந்துகளை மேற்படி சபையினுல் அங்கீகரிக்கப்பட்ட மருந்து தயாரிப்பாளர்களிடமிருந்து இனிமேல் கொள்வனவு செய்யமுடியும். நாவினுவில் இருந்து வட பகுதிக்கு மருந்துகள் கொண்டுவருவதில் சிரமமேற்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# சனசமூக நிலையங்களுக்கு வயோதிபர் உதவி தேவை

(அரியாலை)

"பாரம்பரிய வரலாற்றுச் சிறப்புமிக்க அரியாலைப் பிரதேசத்தில், பண்டையோரால் பல குளங்கள் வெட்டப்பட்டன. அக்குளங்களின் பயனைப் பெற்றுப் பொருளாதாரச் சிறப்புப் பெற்ற அரியாலையில் பல இடங்கள் குளங்களின் பெயர்களைக் கொண்டே இன்றும் அழைக்கப்படுகின்றன. அதன் வரிசையில் ஒன்றுன புங்கங்குளத்திற்கு, அரியாலைச் சனசமூக நிலையம் பெரும் புகழையும், பயனையும் பலகாலமாக அளித்து வருகிறது. அரியாலையில் இன்னும் பல சனசமூக நிலையங்கள் ஆரம்பிக்கப்படவேண்டும். இன்றைய கால கட்டத்தில் வயோதிபர்கள் இளைஞர்களாக மாறிச் சனசமூக நிலையங்களுக்கூடாக தம்மால் செய்யக் கூடிய பங்களிப்பை எமது சமூகத்துக்குச் செய்ய முன்வர வேண்டும்."

இவ்வாறு யாழ். மாநகர சனசமூக நிலையங்களின் சமாசத் தலைவர் கலாநிதி சு. மோகனதாஸ் அவர்கள், அரியாலை சன சமூக நிலையத்தின் 37வது ஆண்டு நிறைவு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில் குறிப்பிட்டார். நிலையத் தலைவர் தரு. எஸ். ரி. பத்மநாதன் தலைமையில் இவ்விழா நடைபெற்றது.

நிலையக் கொடியை விழாத் தலைவர் ஏற்றி வைத்தார். நிலைய கீதம் இசைக்கப்பட்டது. இல்லங்களுக்கு இடையிலான மெய்வல்லுனர் போட்டிகள் நடைபெறறன. நிலையத் தலைவர் திரு. எஸ். ரி. பத்மநாதன் தலைமையுரையில் குறிப்பிட்டதாவது:-

"பல்லாண்டு காலமாக யாழ். மாவட்டத்தில் முதன்மை பெற்று விளங்கும் இந்நிலையம், வருடாவருடம் விளையாட்டுப் போட்டியைச் சிறப்போடு நடத்தி வருகிறது" என்றார்.

யாழ். தொகுதி விளையாட்டு அதிகாரி திரு. எஸ். விமல்ராஜ், நல்லூர் தொகுதி விளையாட்டு அதிகாரி செல்வி கே. யசோதா, விளையாட்டு வீரர் திரு. பொ. பஞ்சலிங்கம், ஆசிரியர் திரு. எஸ். கே. மகாலிங்கம் ஆகியோர் விளையாட்டுப் போட்டி நடுவர்களாகக் கடமையாற்றினர்கள். யாழ். கனகரத்தினம் ம. ம. வித்தியாலய அதிபர் திரு. மு. இராமலிங்கம், யாழ். பார்வதி வித்தியாலய அதிபர் திரு. எஸ். பாலசிங்கம் ஆகியோரும் இவ்விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

திருமதி புஷ்பராணி மோகனதாஸ் அவர்கள் பரிசில் வழங்கினர். நிலைய செயலாளர் திரு. ந. கிருஷ்ணசிங்கம் அவர்கள் நன்றியுரை கூறினர்.

## கண்காட்சி

(வேலணை)

வேலணை கிழக்கு செட்டிபுலம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் கல்விக் கண்காட்சி யொன்று நடைபெற்றது. இக்கண்காட்சியை வேலணை வட்டாரக் கல்வி அதிகாரி திரு. பொன். கணேசன் ஆரம்பித்து வைத்தார். ஆரம்பகணிதம், மொழி, இரண்டாம் மொழி சம்பந்தமான கட்புலக் கண்காட்சியும் நடைபெற்றது. இவை கல்வி அதிகாரி பொன். கணேசனுலும் மற்றும் அதிபர், ஆசிரியர்களாலும் பாராட்டுப் பெற்றது.


நம்பிக்கை! நாணயம்!! பாதுகாப்பு!!!

## நல்லூர் உற்சவ வட்டிச் சலுகை

10-8-1986 தொடக்கம் 10-9-1986 வரை

மாதாந்தம் | 20 % | வட்டியுடனும்

கூடுதலாக | 4 % | போனசுடனும்

மொத்தமாக | 24 % | வட்டி பெற

இன்றே முதலீடு செய்யுங்கள்

# யாழ்-தமிழர் நிதியம்

140, நாவலர் வீதி, (மனேகரா சினிமா அருகாமை) யாழ்ப்பாணம்.

உதய சிந்தனை

நுட்பமானதாய் மாட்சியுடையதாய் -ஆராயவல்லதான அறிவு இல்லாதவனுடைய எழுச்சியான அழகு, மண்ணுல் சிறப்பாகப் புனையப்பட்ட பாவை போன்றது. —திருக்குறள்

40, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி: 22437

இதழ் ஒலி

12-8-86 செவ்வாய்க்கிழமை (அக்ஷய) ஆடி 27

# தகப்பன் பெயர் தெரியாத பிள்ளை

இனப்பிரச்சினைத் தீர்வுக்கு தற்போது அரசாங்கம் முன்வைத்திருக்கும் ''மாகாண சபை'' என்ற யோசனையின் தந்தை யார்?

இலங்கை அரசியல் வட்டாரங்களில் பெரும் பிரச்சினையைக் கிளப்பியுள்ள ஒரு பிரச்சினை இது.

அண்மையில் பௌத்த பிக்குமார் கூட்டமொன்றில் பேசும் போது ஜனுதிபதி ஜெயவர்த்தன அவர்கள், மாகாண சபை யோசனையின் தந்தை காலஞ்சென்ற பிரதமர் எஸ் டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா என்று கூறியதிலிருந்து இந்தப் பிரச்சினை ஆரம்பமானது.

அதிகாரப் பரவலாக்கல் என்ற யோசனையை மாவட்டசபைத் திட்டம் மூலம் முதன்முதலாக முன்வைத்தவர் அமரர் பண்டாரநாயக்காதான் என்று சொன்ன ஜனுதிபதி ஜெயவர்த்தன, அதனையே நாற்பதாண்டுகளின் பின்னர் தாம் நடைமுறைப் படுத்த முனைவதாகவும் இங்கு தெரிவித்துள்ளார்.

ஆனல் இதனை அப்பட்டமான பொய் என்று அமரர் பண்டாரநாயக்காவின் மனைவியும், சுதந்திரக் கட்சித் தலைவியுமான ஸ்ரீமாவோ அவர்கள் தெரிவித்துள்ளார்.

தனது கணவரின் மாவட்டசபைத் திட்ட அதிகாரப் பரவலாக்கலுக்கும், ஜே. ஆரின் மாகாணசபைத் திட்ட அதிகாரப் பரவலாக்கலுக்குமிடையே அடிப்படை அம்சங்களிலேயே பலத்த வேறுபாடு இருப்பதாகவும் இவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சிங்கள மக்களால் ஏற்கமுடியாத, நாட்டைத் துண்டாக உதவும் மாகாணசபை யோசனையின் தந்தை அமரர் பண்டாரநாயக்கா என்று கூறி, மக்களை ஏமாற்ற ஜே. ஆர். எத்தனிக்கிருர் என்றும் ஸ்ரீமாவோ குற்றஞ்சாட்டியிருக்கிருர்.

இது பண்டாரநாயக்காவின் திட்டமோ, ஜெயவர்த்தனவின் திட்டமோ என்பதல்ல தமிழரின் பிரச்சினை.

இந்தத் திட்டம் அல்லது யோசனை தமிழரின் பிரச்சினைகளை, அபிலாஷைகளைத் தீர்க்குமா என்பதுவே எமது முதற் பிரச்சினை.

ஆனலும் சிங்கள அரசியல் தலைவர்கள், தகப்பன் பெயர் சரியாகத் தெரியாத, அல்லது தகப்பன் பெயரை மறைக்க விரும்பும் ஒரு யோசனையை தமிழர் தலையில் சுமக்கவைக்க முயற்சிப்பதுதான் எமக்கு வேதனையைத் தருகின்றது.

பண்டா—செல்வா ஒப்பந்தம் கிழிக்கப்பட்டபின், டட்லி-செல்வா ஒப்பந்தம் செய்யப்படவில்லையா?

அப்படியானல் மாகாணசபை அடிப்படைத் திட்டத்தை டட்லியின் யோசனைகள் என்றும் அழைக்கலாமென நாளை யாராவது ஒருவர் கூறலாம்.

அதிகாரப் பரவலாக்கலை 1947ம் ஆண்டு அமரர் பண்டாரநாயக்கா முதன்முதல் பிரேரித்தார். அது டி எஸ். சேனநாயக்காவின் பிரதமர் பதவிக்காலம். அங்கு பண்டாரநாயக்கா உள்ளூராட்சி அமைச்சராக இருந்தார். அப்போதே இந்த யோசனையை அவர் முன்வைத்தார்.

இதே அமைச்சரவையில் ஜே. ஆர். ஜெயவர்த்தன நிதி அமைச்சராக இருந்தவர்.

பண்டாரநாயக்காவின் யோசனை இங்கு நிராகரிக்கப்பட்டது. அச்சமயம் இதனை நிராகரித்தவர்களில் ஒருவர் ஜெயவர்த்தனவும தான் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை உருவாக்கிய பின்னர் 1952ம் ஆண்டிலும், அதன் தலைவரான பண்டாரநாயக்கா அதிகாரப் பரவலாக்கலை மீண்டும் கொண்டுவர விரும்பினுர். 1956ல் இதனை கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்திலும் வெளியிட்டார்.

அப்போது இதனை வன்மையாக எதிர்த்தவர்களில் ஒருவர் ஜெயவர்த்தன என்பதையும் மறந்துவிடக் கூடாது.

இன்று, முப்பதாண்டுகளின் பின், தவிர்க்கமுடியாத காரணங்களால் மாகாணசபையை முன்வைத்துள்ள ஜெயவர்த்தன அவர்கள், தனது திட்டத்தின் தந்தை அமரர் பண்டாரநாயக்கா என்று சொல்வது அரசியல் விந்தையாக இல்லையா?

''பண்டாரநாயக்கா கொள்கை செத்துவிட்டது; மக்கள் அதனை முற்று முழுதாக நிராகரித்துவிட்டனர்; இது ஜெயவர்த்தன யுகம்'' என்று கூறிவந்த ஜனுதிபதி, பண்டாரநாயக்கா கொள்கையை எதற்காக அமுல் படுத்த வேண்டும்?

ஜெயவர்த்தன கொள்கை என்று அடிப்படையாக அவரிடம் எதுவுமே இல்லையா?

தன்னல் சமர்ப்பிக்கப்பட்டுள்ள யோசனைகளுக்கு இருபத்தைந்து ஆண்டுகட்கு முன்னர் கொல்லப்பட்ட ஒருவரை இழுத்து வந்து ''இவர்தான் தந்தை'' என்று கூறுவது நியாயமாகுமா?

இந்த இலட்சணத்தில் பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்குமென்று எப்படி நம்பமுடியும்?

பனை அபிவிருத்திச் சபையில் நடாத்தப்பட்ட பத்திரிகையாளர் மகாநாட்டில் சபைத் தலைவர் திரு. கே நடராசா தெரிவித்த தகவல்கள். தொகுப்பு: சுண்டுக்குளி நிருபர்.

# 4 மாவட்டத்தில் பனைத்தோட்டம்

# கிராமங்களில் பனை கண்காட்சி

''தற்போதைய சூழ்நிலையில் சகலதரப்புகளிலுமிருந்து பனை மூலவளத்தைக் கொண்ட அபிவிருத்தி பற்றியே பேசப் பட்டுவருகின்றது. பனம் பொருட்களை மையமாகக் கொண்டு நூற்றுக்கு மேற்பட்ட பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகின்ற போதிலும், போதிய பயிற்சி கொடுக்கப்படுகின்ற போதிலும், சில பொருட்கள் ஏற்றுமதி வாய்ப்பைப் பெற்றுள்ள போதிலும் முதலீட்டாளர்கள் பனம்பொருள் உற்பத்திகளிலான முதலீடுகளைச் செய்ய முன்வராத காரணத்திஞல் பனம் பொருள் அபிவிருத்திக்கான முன்னேற்றத்தில் தடை ஏற்படுகின்றது.

இத்தடையை நீக்கும் பொருட்டுச் சிறிய அல்லது பாரிய அளவிளான தொழிற்துறை நிறுவனங்களையும், தொண்டர் ஸ்தாபனங்களையும் வேறுபல அமைப்புக்களையும் இத்துறையில் ஈடுபடுவதற்கு நாம் ஊக்கமளித்து வருகின்ரேம்; மக்கள் தமது எதிர்காலச் சந்ததியினரின் நலன் கருதியாவது பனம் பொருள் உற்பத்திகளை ஆதரிக்க வேண்டும். மக்கள் அதிக ஆர்வத்துடன் பனம் பொருட்களை அன்ருடப் பாவனைக்குப் பயன் படுத்த வேண்டும். தொழிலதிபர்கள், அனுபவம் மிக்கவர்கள், கூட்டுறவுச் சங்கங்கள், கம்பனிகள் ஆகியன ஒவ்வொரு பனம் பொருளுக்கும் தனித்தனி தொழிற்சாலைகளை உருவாக்கி உற்பத்திகளை அதிகரிக்க முன்வர வேண்டும்.

பனை அபிவிருத்திச் சபையினல் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள பாம்கோலா, இறக்குமதியாகும் கொக்கோகோலாவிற்கு எந்தவகையிலும் தரத்தில் சளைத்ததல்ல. சபையின் அனுசரணையுடன் யாழ்ப்பாணத்திலுள்ள ஒரு கம்பனி வெளியிட்டுள்ள ''பாம் ஏல்'' என்னும் பானம் பியர் போன்றது. இது கள்ளை மூலப் பொருளாகக் கொண்டது. இதற்கெனத் தொழிற்சாலை தனியாக நிறுவப் பட்டால் நாளாந்தம் 5,000 போத்தல்கள் வரை உற்பத்தி செய்யலாம், திக்கம் சாராய வடிசாலையில் உற்பத்தி செய்யப்படும் பனஞ்சாராயம் தரமான சாராயம் என்று அரச பகுப்பாய்வுத் திணைக்களத்திஞல் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

நாளாந்த பாவனைக்குரிய பொருட்களைத் தற்போது வெளி மாவட்டங்களில் காண முடியாதுள்ளது. இன்றைய சூழ்நிலையில் சந்தைப் படுத்தலில் போக்குவரத்துப் பிரச்சினை போன்ற சிரமங்கள் தோன்றியுள்ளதே இந்நிலைக்குக் காரணமாகும். இதஞல் இம் மாகாணத்துக்குள்ளேயே பாரம்பரிய முறையிலான உற்பத்திகள் துரிதப்படுத்தப் பட்டுள்ளன. நாடு முழுவதிலும் 4,000க்கும் மேற்பட்டவர்களுக்கு பனம் பொருள் உற்பத்திப் பயிற்சிகள் அளிக்கப் பட்டுள்ளன. வடக்கு, கிழக்கு மாகாணங்களிலும், புத்தளம், அம்பாந்தோட்டை ஆகிய இடங்களிலும் 20 போதனுசிரியர்கள் பயிற்சி அளித்து வருகின்றனர். இப்பயிற்சிகளுக்கு இளைஞர், யுவதிகள் ஆர்வத்துடன் முன்வருகின்றனர்.

கல்வித் திணைக்களத்தின் மூலம் தொழில் முன்னிலைப் பாடநெறியில பனை வளத் தொழிலையும் ஒரு பாடமாகச் சேர்ப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. வெளிநாடுகளிலிருந்து 'மாதிரி'ப் பனம் பொருட்களைக் கோரியுள்ளனர். இதஞல் ஏற்றுமதி வாய்ப்புக் கிடைத்துள்ளதுடன் தரமான பொருட்களையும் உறபத்தி செய்யக் கூடியதாக உள்ளது. எமது உற்பததிகளை நவீனமயப்படுத்தி வருகின்ரேம். பனந்தும்பு இங்கு இயறகையாகவே கிடைக்கக் கூடிய தரமான தும்பு. வெளிநாட்டவர்கள் இங்கிருந்து பனந்தும்பை ஏற்றுமதி செய்து அங்கிருந்து பனந்தும்பிஞலான பிரஷ் போன்றவற்றை இங்கு இறக்குமதி செய்கிறனர். பனந்தும்பை ஏற்றுமதி செய்வதை விடத் தொழிற்துறை ஸ்தாபனங்கள் முன வந்து பனந்தும்பைக் கொண்டு உற்பத்திப் பொருட்களைச் செய்ய முன்வர வேண்டும்.

இந்தியாவில் பனந்தும்பு ஏற்றுமதி மூலம் கோடிக்கணக்கான வருவாய் ஈட்டப்படடு வருகின்ற போதிலும் எமது நாட்டுப் பனந்துமபு 'தரம்' வாய்ந்தது எனறு இந்திய நிபுணர்கள் தெரிவத்துள்ளனர். பனம் பொருள் உற்பததியில் ஈடுபட ஆர்வமுள்ளவர்களுக்கு வேண்டிய ஊக்குவிப்பு உதவிகளை வழங்கவும், இலவச தொழில் நுட்ப ஆலோசனைகளை வழங்கவும் பனை அபிவிருத்திச் சபை தயாராக உள்ளது. கிராமம் தோறும் பனம் பொருட்களை அறிமுகப்படுத்திச் சந்தைப்படுததுவதறகு நடவடிக்கை எடுத்துளளோம். இதற்கு முன்னேடியாகக் கிராமம் தோறும் கண்காட்சிகளை நடாத்தி வருகின்ரேம.

நான்கு மாவட்டங்களில் பனைமரப் பெருந்தோட்டங்களை உருவாக்கி வருகின்ரேம். வடமராட்சி வடக்கு - கிழக்கு மாமுனையில் 500 ஏக்கரில் அமைந்துள்ள பனைமரப் பெருந்தோட்டத்தில் ஊடு பயிராக மேற்கொண்ட 'கஜு' உற்பததி மூன்று வருடத்தில் அமோக வெற்றி கண்டுள்ளது. விவசாயத் திணைகளத்திற்கு சபை 10,000 கஜு விதைகளை வழங்கியுள்ளது ஒரு சாதனை. இன்னும் இரு வருடத்தில் சபை கஜு ஏற்றுமதியை மேற்கொள்ளும். ஊடு பயிர் மூலம் இவ்வாண்டு 30,000 கஜு விதைகள் பெறப்பட்டுள்ளன.

இலங்கையும், இந்தியாவும் பனைப் பொருளாதாரத்தில் நம்பிக்கை கொண்டுள்ளன. இநதியா பனை அபிவிருத்தியில மிகவும் முன்னேற்றம் கண்டுள்ளது. தற்போது இலங்கையும் முன்னேற்றம் கண்டு வருகின்றது. ஏறறுமதி செய்வதற்கான ஒரே வழி பனம் பொருளுறபத்திகளை அதிகரிப்பதும், தரத்தைக் கூட்டுவதுமேயாகும். உடன் தயாரிப்பதறகான சைவ, அசைவ ஒடியல் கூழ் புதிய தயாரிப்பாகும். எமது வீடுகளில் விருநதுகளுக்கும், வைபவங்களுக்கும் பனங்காய் பணிகாரம், பனம் ஜாம், கோடியல், பனம் பானம் முதலிய வற்றைப் பயன்படுத்த வேண்டும். வருடம் முழுவதும் பயன்படுத்தக் கூடியதாகப் பதப்படுத்தப்பட்ட பனம்பழச் சாறை வழங்கப் பனை அபிவிருத்திச் சபை தயாராக உள்ளது.

எமது எதிர்பார்ப்பின் 50 வீதம் நிறைவேற்றப்பட்டால் 10,000 பேருக்குச் சுயதொழில் வாய்ப்பும வழங்ககூடியதாக இருக்கும். இதற்காகச் சபைஒருங்கிணைக்கப்படட ஐந்தாண்டுத் திட்டத்தை வகுதது நடைமுறைப்படுத்தி வருகின்றது.

## புலமைப் பரிசில்

(புங்குடுதீவு)

புங்குடுதீவு ஸ்ரீகணேசமகா வித்தியாலயத்தில் கல்வி பயின்று கடந்த டிசம்பரில் நடைபெற்ற க.பொ.த.ப.சாதாரணதரப் பரீட்சையில் அதி உயர்நத சித்துப் பெறுபேற்றினைப் பெற்ற மாணவிக்கு புலமைப் பரிசில் ஒன்று வழங்கப்படவிருக்கிறது.

காலஞ்சென்ற திருமதி நிர்மலா நடேசன் நினைவாக இப் புலமைப் பரிசில் வழங்கப்படும் பரிசு பெறும் மாணவியைத் தெரிவு செய்யும் பொருட்டு விரைவில் இதற்கான அறங்காவலர் குழு கூடவிருப்பதாகப் பிரஸ்தாப வித்தியாலய அதிபர் திரு. த. துரைசிங்கம் தெரிவித்தார்.




உ

முருகா

நல்லூர் கந்தசுவாமி கோயில்
மஹோற்சவம் - 1986
இன்று மூன்றும் திருவிழா

காதலொடு பாடுமொரு கூட்டம் — பூசை
காணவிரை யும்பிறிதொர் கூட்டம், — குல
மாதர், வய தானவர்கள் பாலர், இள வாலைகள் எம் —
மருங்கும் — வந்து - நெருங்கும்!

— சோ. ப.

B/1449

எந்தை கந்தவேளைப் பிரார்த்தித்துப் பிரசுரிப்பவர்கள் — 'ரெலிகுளோப்'

★ இன்று குருபூஜைத்தினம்

# சிவனருள் பெற்ற சுந்தரமூர்த்தி நாயனுர்

பார்புகழும் சைவசமயத்தின் இனிய- மரபான- முரண்பாடற்ற வளர்ச்சியை ஒரு அருமையான சாதனையை நிறைவேற்றியதோடு சிவனருளின் இனிமையைநாமெல்லாம் எளிதில் உணரும்படி அவதரித்து வாழ்ந்தவர் சுந்தரமூர்த்தி சுவாமிகள். திருத்தொண்டத்தொகை அருளிச் செய்வதே சுந்தரமூர்த்தி சுவாமிகளின் அவதார நோக்கம் என்பது பல சைவமெய் ஞானிகளது முடிவாகும். பகுத்தறிவையும தருக்க சிந்தனையையும் கைவிடாத வகையில் எம சைவத்தமிழுலகு பெருமிதம்கொள்ளும் அரிய செல்வமாகவுள்ள பெரியபுராணத்துக்கு மூலகாரணமான திருத்தொண்டத்தொகை தகுதிவாய்ந்த பேரருளாளரால் அருளப்படவேண்டுமென்றே கயிலைவாசியான ஆலால சுந்ரரை சிவபெருமான் பூமியில் தோன்றப் பணித்தார்.

நவரத்தினங்களும் தூய பொன்னாபரணங்களும் மலிந்திருக்கின்ற சூழலில் வாழும் ஒருவன் கண்ணாடித் துண்டினதும் ஈயக்கடுதாசிகளதும் பிரகாசத்திலும் அழகிலும் மயக்கமடைவது எப்படி பொருந்தாத செயலாக அமையுமோ அப்படியான பொருந்தாத செயலே கயிலைவாசியாய- சிவபெருமானுக்கு அருகிலேயே இருந்து விபூதியும் மலர் மாலைகளும் எடுத்துச் சிவபெருமானுக்கு அணிவிக்கும் பேறு பெற்ற சாமீப முத்தராகிய ஆலால சுந்தரர் மாதர் மேல் மனம் வைத்தலாகும். அப்படியிருந்தும் சுந்தரரைப் பூமிக்கு அனுப்பித் தென்னாடுச் சைவத்தமிழ் மக்களை உய்டக் கொள்ளவேண்டுமெனச் சிவபெருமானது திருவுள்ளத்து எண்ணம் சுந்தரர் மனதைப் பெண்களிடம் செல்லச் செய்தது.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருத்தொண்டத் தொகையில் மட்டுமன்றி வேறு பல பதிகங்களிலும் அடியார் வணக்கத்தைச் சிறப்பாக புரிந்திருக்கின்ருர். 'நற்றமிழ் வல்ல ஞானசம்பந்தன் நாவுக்கரையன் நாளைப் போவானும் கற்ற சூதன் நற்சாக்கிய சிலந்தி கண்ணப்பன கணம்புல்லன் என்றிவர்கள் குற்றம் செய்யினும் குணம் எனக் கொள்ளும் செய்கை கண்டு நின் திருவடியடைந்தேன் என்பது சுந்தரர் தேவாரமொன்றின முற்பகுதியாகும். இதுபோல --"நேசமுடையடியவர்கள்வருந்தாமையருந்த நிறைமறையோர் உறை வீழிமிழலைதனில நித்தல் காசருளிச் செய்தீர்"-- என்று ஒரு பாடலில் திருஞானசம்பந்தரையும் திருநாவுக்கரசரையும் நினைவு கூர்வார். 'எறிந்த சண்டி இடந்த கண்ணப்பன் ஏத்துபத்தர்கள்' என்றும் பல இடங்களில் அடியார்களைச் சிந்தித்து வந்திக்கும் இயல்புடைய சுந்தரர் திருவானைக் காப் பதிகத்தில் (சிவபெருமானை) இறைவன் என்றடி சேர்வார் எம்மையும் ஆளுடையாரே' என்ற கருத்தை ஒவ்வொரு பாட்டிலும் வைத்து அடியார் வணக்கத்தையே சிவ வணக்கமாகச் செய்வார்.

தொண்டர் தம் பெருமை சொல்லுதலும் பெருமையான செயல் என்ற ஔவை கருத்துப்படி பெரும் செயல் புரிந்த சுந்தரமூர்த்தி சுவாமிகள் சிவனடியாராகவும் சிவனடியார்க்கு அடியாராகவும் வாழ்வதனால் மறு உலக வாழ்வில் மட்டுமன்றி இவ்வுலக வாழ்விலும் ஒரு குறைவுமின்றி வாழலாம் என்பதையும் தன் வாழ்வுச் சிறப்பின் மூலமாகவும் தேவாரப் பாக்கள் மூலமாகவும் உணர்த்தியுள்ளார்:

'திருவும் மெய்ப்பொருளும் செல்வமும் எனக்குன் சீருடைக் கழல்கள் என்றெண்ணி ஒருவரை மதியாது உறுமைகள் செய்துமுடியும் உறைப்பனாய்த் திரிவேன்' 'பொன்னும் மெய்ப்பொருளும் தருவானைப் போகமும் திருவும் புணர்ப்பானை' என்றும் பாடியபடியே சுந்தரமூர்த்தி சுவாமிகள் சிவனருளால் இம்மை நலன்களையும் மெய்ஞானச் சிறப்பையும் பெற்று வாழ்ந்து காட்டினார். இவ்விடயத்தில் நாம் கருத்தில் கொள்ளவேண்டிய உண்மை ஒன்று உண்டு.

சிவத்தியானம்- வழிபாடு- பிரார்த்தனை- சிவத்தல யாத்திரை என்பவைகளையே தன் குறிக்கோளாகவும்- இலட்சியமாகவும்- தன்மனத்திற்கு இனிய செயல்களாகவும் கொண்டு வாழ்ந்தவர் சுந்தரமூர்த்திநாயனார்.

கடவுள் வழிபாட்டையும் சிவப்பணி- தியானம் என்பனவற்றையும் நம் வாழ்வில் நாம் மேற்கொள்ளக் கூடிய அரிய செயல்கள் என மதித்து நேர்மையான உழைப்பினால் வந்த பொருளையோ உண்மையான முயற்சியாய், அமையும் வழிபாட்டையோ நாம் மேற்கொண்டால் சிவபெருமான் சுந்தரமூர்த்தி நாயனாருக்குத் தோழனாயிருந்து அருள்புரிந்ததுபோல் நமக்கும் அருள் புரிவான்.

சிவசாமிப்பிய முத்திநிலையில் திருக்கயிலையில் இருந்த சுந்தரரைச்சிவபெருமான் தமிழ்நாட்டுக்கு அனுப்பியருளியது அவருக்குத்தான் அருளியதுபோல நமக்கும் தான் அருள்வேன் என்பதை சுந்தரர் வாழ்ந்தது போல நாமும் தூய சிவ நேயராயும், சிவனடியார்க்கு அடியராயும் வாழவேண்டும் என்பதை உணர்த்தவுமேயாம். சிவனடியார் பக்தியின் செயல்களான குருபூசை செய்தும் குருபூசையின் சிவபக்தி- சிவதீட்சை- சிவ பூசை முதலிய உடைய சிவனடியார்களைச் சிவபெருமானாகவும் குரு பூசைக்குரிய நாயனாராகவும் வணங்கி மகேஸ்வர பூசை செய்தும் சிவாலய வழிபாடு- பஞ்சாட்சர செபம்- விபூதி உருத்திராக்கதாரணம்- சிவத்தியானம்- சிவ பூசை என்பனவற்றை இயன்றளவு செய்வதோடு சிவனருளால் சைவத்தமிழ் மக்களுக்குக் கிடைத்த பெறவரும் பெருநிதி போன்ற தமிழ் வேத பாராயணத்தையும் மேற்கொள்வோமானால் எம் முயற்சி வலிமையும் புனிதமும் அடைய அடைய சிவனருள் சுந்தரருக்குக் கிடைத்தது போல நமக்கும் கிடைக்கும்.

❊ பொன். புவனேஸ்வரி

## இன்சுலின் தட்டுப்பாடு

(சுன்னாகம்)

தெல்லிப்பளை அரசினர் வைத்தியசாலையில் நீரிழிவு நோய்க்கெனப் பயன் படுத்தப்படும் 'இன்சுலின்' என்ற ஊசி மருந்துக்குத் தட்டுப்பாடேற்பட்டுள்ளதாகக் கவலை தெரிவிக்கப் படுகிறது. கடந்த இரு மாதங்களாக இம் மருந்திற்குத் தட்டுப்பாடேற்பட்டுள்ளதால் நோயாளர்கள் அதிக விலை கொடுத்து வெளிக் கடைகளில் வாங்க வேண்டிய நிலையுருவாகியுள்ளது.

★ சென்னையில் 'அமிர்' தம்நிலை வெளிப்பாடு
தற்போதைய பேச்சுக்கள் தோற்றால்...

# தமிழர் விடுதலை காண பாரதமே உதவ வேண்டும்

(சென்னை)

"தற்போது நடைபெற்று வரும் அரசியல் தீர்வு முயற்சி தோல்வியடையுமானால் தமிழர்களைக் காப்பாற்றி அவர்கள் விடுதலை பெற்று வாழ பாரதம் தான் உதவி செய்ய வேண்டும்" என்று தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலதிபர் திரு. ஏ. அமிர்தலிங்கம் கேட்டுக் கொண்டுள்ளார்.

சென்னையில் நடைபெற்ற தமிழர் நிலை தொடர்பான தேசிய மாநாட்டில் பேசுகையிலேயே அவர் இக்கோரிக்கையை விடுத்தார்.



"தமிழர் தாயகம் என்ற அடிப்படைக் கொள்கையை நாம் விட்டுக்கொடுக்கத் தயாராக இல்லை" என்று சொன்ன அவர் "தமிழர் பகுதிகளைப் பிரிப்பதற்கும் நாம் உடன்பாடாக இருக்கமாட்டோம்" என்றும் சூளுரைத்தார்.

"தமிழர் அமைப்புக்களுக்கும், தமிழ் அரசியல் கட்சிகளுக்கும்இடையே பேதம்ஏதுமில்லை நாமனைவரும் ஒன்றே எமது கருத்தும் ஒன்றே" என அவர் வலியுறுத்தினார்.

"தமிழர் உரிமைகளைப் பாதுகாத்து, விடுதலை காண உண்மையுடனும், அமைதியுடனும் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறோம்" என்றும் குறிப்பிட்டார் அவர்.

முதல்வர் எம். ஜி. ஆர். செய்தி

## தைரியத்தின் சின்னமாக திகழ்ந்தவர் வைத்யா

(சென்னை)

முன்னாள் இராணுவத் தளபதி 'ஜெனரல் வைத்யா நாட்டுப்பற்றினதும் தைரியத்தினதும் சின்னமாகத் திகழ்ந்தவர்' என்று தமிழக முதலமைச்சர் திரு. எம் ஜி. இராமச்சந்திரன் தனது இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.

'இச்செயலை நாகரிக உலகம் முழுவதும் கண்டிக்கும்' என்றும் கூறிய அவர், ஆழ்ந்த அதிர்ச்சியும், கவலையும் தெரிவித்துள்ளார்.

இச்செயல் குறித்து இந்திய கம்யூனிஸ்ட் தலைவர் திரு. எம். கல்யாணசுந்தரம் தனது செய்தியில், 'கோழைகளின் ஈனச் செயல் இது' எனத் தெரிவித்துள்ளார்.

பிரதமர் திரு. ராஜீவ்காந்தி மத்திய இணைமந்திரி திரு. பி. சிதம்பரம் உட்பட பலரும் இச்செயலைக் கண்டித்துள்ளனர். திருமதி வைத்யாவின் நிலை தேறி வருகிறது.

சென்னை மாநாட்டில் எச்சரிக்கை:

## இலங்கை இனப்பிரச்சினையால் பாரத பாதுகாப்புக்கே அச்சுறுத்தல் உள்ளது

(சென்னை)

"இலங்கை இனப்பிரச்சினையில் பாரத அரசு ஆக்கபூர்வமானதும், உறுதியனதுயான நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்" என்று சென்னையில் நேற்று முன்தினம் நடைபெற்ற இலங்கை இனப்பிரச்சினை தொடர்பான மாநாட்டில் பேராசிரியர் பால்அத்தோ குறிப்பிட்டார்.

"இலங்கை நிலைமையால் பாரதத்தின் பாதுகாப்பிற்கே அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது" என எச்சரித்த அவர், 'இலங்கை அரசு' முயற்சிசெய்யாவிட்டால் எத்தீர்வும் பூர்த்தி பெருது" என்ருர்.

திரு. பி.ராமமூர்த்தி பேசுகையில், "பாரதம் இது விடயத்தில் விழிப்புடன் இருக்க வேண்டும்" என்ருர்.

பிரபல பத்திரிகையாளரான திரு. கே. எல். மல்காணி பேசுகையில் "இப்பிரச்சினை தீர வேண்டுமாயின் தமிழும், சிங்களத்துடன் அரசகரும மொழியாக வேண்டும். தமிழர் வாழும் பகுதிகளில் சுயாட்சி ஏற்பட வேண்டும்" என்ருர்.

டாக்டர் கலாநிதி, திரு. பி. நெடுமாறன் முதலானோரும் பேசினர்.

'சார்க் அமைப்பு:

## வெளியுறவு மந்திரிகள் இன்று சந்திக்கின்றனர்

(டாக்கா)

தெற்காசியப் பிராந்திய நாடுகளின் ஒத்துழைப்பின் முன்னேற்றம் குறித்து ஆராயவென மேற்படி 'சார்க்' அமைப்பின் வெளிநாட்டமைச்சர்கள் இன்று டாக்காவில் கூடுகின்றனர்.

ஒருவருடத்திற்குமுன் அமைக்கப்பட்ட இந்த அமைப்பின் உச்சி மாநாடு பெங்களூரில் நடை பெறவுள்ளது.

இதற்கு நிரந்தரச் செயலகம் ஒன்று தேவை என்ற கருத்தும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

## எஞ்ஜின்கோளாறு

(மாஸ்கோ)

பிரதமர் திரு. ராஜீவ்காந்தி பயணம் செய்த விமானத்தில் எஞ்ஜின் கோளாறு ஏற்பட்டதால் அது மாஸ்கோ விமான நிலையத்தில் தரையிறக்கப்பட்டது,

செக்கோசிலோவேகிய விஜயத்தின் பின் அவர் தாயகம் திரும்பிக் கொண்டிருக்கையில் இவ் எச்சரிக்கை சமிக்ஞை விடுக்கப்பட்டது.

வெங்கடேஸ்வரன் தகவல்

## கூட்டணித் தூதுக்குழு சனியன்று வருகின்றது

(கல்கத்தா)

"இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வு முயற்சியாக இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தைகளின் பொருட்டு தமிழர் விடுதலைக் கூட்டணித் தூதுக்குழுவினர் எதிர்வரும் சனிக்கிழமை கொழும்பு செல்வர்" என்று வெளியுறவுச் செயலர் திரு. ஏ. பி. வெங்கடேஸ்வரன் கல்கத்தாவில் செய்தியாளரிடம் பேசுகையில் தகவல் வெளியிட்டார்.

"இலங்கை இனப்பிரச்சினை அதன் உள்நாட்டு விடயமாதலால் அந்நாடுதான் அதைத் தீர்க்க வேண்டும்" என்றும் சொன்னுர் அவர்.

## ஈரானுடனுன உறவுக்கு சோவியத் யூனியன் விருப்பு

(தெஹ்ரான்)

சோவியத்யூனியனுடன் உறுதியான உறவு கொள்ளும் சாத்தியம் உண்டென்று ஈரானியப் பிரதி வெளிநாட்டமைச்சர் தெரிவித்துள்ளார்.

பரஸ்பர நலன்களைப்பேணிக் காக்க சோவியத் யூனியன் விருப்பம் தெரிவித்துள்ளதாகவும் அவர் கூறினார்.

இவ்வருடத்தில் சோவியத் வெளிநாட்டமைச்சர் இங்கு வரவுள்ளார், என்றும் அந்நேரம் கூட்டுக்கமிஷன் மாநாடு நடைபெறும் என்றும் மேலும் அவர் தகவல் தந்தார்.

ஈழமுரசு

## வடக்கு, கிழக்கு மாகாணங்கட்கு புதிய டி. ஐ. ஜி. மார் நியமனம்

வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு புதிய பிரதி பொலிஸ் மா அதிபர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். வடமாகாண பிரதி பொலிஸ் மா அதிபராக பொலிஸ் சுப்பிரின்டன் திரு. டி. ரி. எம். சேனரத்தின நியமிக்கப்பட்டுள்ளார். கிழக்கு மாகாண பிரதி மா அதிபராக தென்னிலங்கையிலிருந்து திரு. லயனல் ரணவன இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

ஒரு பிரசுரம் தரும் தகவல்

# யாழ். ஆஸ்பத்திரி முக்கிய மருந்துகள் களவு விற்பனை

"தற்போதைய நிலையில் மருத்துவ மனைகளில் மிகுந்த சிரமத்துடன் சேகரிக்கப்பட்ட மருந்துப் பொருட்களை களவாடி விற்கும் கேவலமான செயலில் சில சுயநலமிகள் ஈடுபட்டு வருகிறார்கள். தமது லாப நோக்கம் கருதி சில தனியார் மருந்து விற்பனை நிலையங்களும் களவாடப்பட்ட மருந்துப் பொருட்களை விலை கொடுத்து வாங்குகிறார்கள். இவ்வாறான நடவடிக்கைகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். இதற்கான நடவடிக்கையினை விடுதலை இயக்கங்கள் உடன் மேற்கொள்ளவேண்டும்"

இவ்வாறு 'அவசர மருத்துவப் பிரிவு' என்ற அடிக் குறிப்பேடு நேற்று யாழ். அரசினர் வைத்தியசாலை ஊழியர்கள் மத்தியில் விநியோகிக்கப்பட்ட பிரசுரமொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

"யாழ் அரசினர் வைத்தியசாலையானது மக்களுக்கான மருந்துப் பொருட்கள், உபகரணங்கள் யாவும் கொழும்பிலிருந்தே தருவிக்கின்றது. இன்று நிலவும் போக்குவரத்துப் பிரச்சினையில் இற்றை இங்கு தருவிப்பது சிரமமானது. அதே சிறீலங்கா அரசின் இராணுவத்தினால் மக்கள் மீது ஏவபபடும் ஷெல்களாலும் ஹெலிகொப்டர், விமானத் தாக்குதல்களாலும் பெருந்தொகையில் நோயாளிகள் அதிகரித்து, மருத்துவ உதவி நாடி மருத்துவ மனைக்கு வந்தவண்ண முள்ளனர்.

இன்று திடீரென நடத்தப்படும் தாக்குதலைக் கருத்திற் கொண்டு முன்கூட்டியே மருந்துப் பொருட்களைச் சேகரித்து வைக்கவேண்டிய அவசியமுள்ளது. எனவே, மருத்துவ சேவை அனைவரினதும் ஒத்துழைப்புடன்—மிகுந்த அக்கறையுடன் சரிவரச் செயற்படுத்த வேண்டிய ஒன்றாகும்" என இப்பிரசுரத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பாதிப்புற்ற 25 பெண்கள் தையல் மெஷின் பெற்றனர்

கடந்த இனக்கலவரங்களின் போதும் மற்றும் வன்செயல்களின் போதும் தமது குடும்பத்தின் பிரதான உழைப்பாளிகளை இழந்த இருபத்து ஐந்து பெண்களுக்கு நேற்று 'அகதிகள் புனர்வாழ்வு நிதியம் 1983' அமைப்பினால் தையல் மெஷின்கள் இலவசமாக வழங்கப்பட்டன. இந்த தையல் மெஷின்கள் யாழ். வை. எம். சி. ஏ. மண்டபத்தில் நடந்த எளிமையான வைபவமொன்றில் வைத்து யாழ். அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கத்தினால் உரியவர்களிடம் கையளிக்கப்பட்டது.

இதற்கென அவுஸ்திரேலிய தூதுவராலயம் ஒரு லட்சம் ரூபாவை "அகதிகள் புனர்வாழ்வு நிதியம் 1983"க்கு அன்பளிப்பாக வழங்கியிருந்தது. இந்த இருபத்து ஐந்து பெண்களுக்கும் தையல் மெஷின்களுடன் அவற்றுக்கான உதிரிப்பாகங்கள் சிலவும், தையலுக்குரிய துணிவகைகள் சிலவும் வழங்கப்பட்டிருந்தன. மேற்படி அமைப்பின் உப-தலைவர்: திரு. எஸ். சிவஞானம், செயலாளர்: திரு. பி. எல். பற்றிக் உட்பட மற்றும் பலரும் இவ்வைபவத்தில் கலந்துகொண்டனர்.

## வயோதிபர் சடலம்

யாழ். சின்னக்கடைச் சந்தியிலுள்ள பேக்கரி ஒன்றின் முன்னால நேற்றுக் காலை அநாதரவாகக் காணப்பட்ட வயோதிபர் ஒருவரின் சடலம் தற்பொழுது யாழ். அரசினர் வைத்தியசாலை சவச்சாலையில் வைக்கப்பட்டுள்ளது. இவரது அடையாள அட்டையில் இராமையா முத்துசாமி (60), உலப்பனை, கிளிநொச்சி என்னும் விபரம் காணப்படுகிறது. உறவினர்கள் உடனடியாக வைத்தியசாலைப் பொலிசாருடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர்.

## நண்டு, மீன் பறிமுதல்

(சுன்னாகம்)

கட்டுமரத்தின் மூலம் கரையோரப் பகுதியில் மீன் பிடிக்கச் சென்றவர்களிடம் பிடிக்கப்பட்ட மீன், நண்டு என்பனவற்றைப் பறித்தெடுத்ததுடன், அவர்கள் தாக்கப்பட்டதுமான சம்பவம் நேற்று முன்தினம் நண்பகலில் சேந்தாங்குளம் கடல் பகுதியில் நிகழ்ந்துள்ளது. திரு. லாசரஸ் மாம்பழம் என்பவரும் அவரது சகோதரனும் கட்டுமரத்தில் பிடிக்கப்பட்ட மீனுடன் திரும்பிக் கொண்டிருந்த வேளை படகில் வந்தவர்கள் தமக்கண்மையில் அழைத்து மீன், நண்டு என்பனவற்றைப் பறித்தெடுத்ததுடன் தாக்கியும், கம்பியினால் குத்தியும், விரைவாகக் கரைக்குச் செல்லுமாறு அச்சுறுத்தி அனுப்பிவிட்டனராம்.

## வல்வையில் ராணுவம் பலி

(வல்வெட்டித்துறை)

வல்வெட்டித்துறை ராணுவ முகாம் முன்பாகவுள்ள தோட்ட வெளியில் ராணுவத்தினர் ஷெல் தாக்குதல் நடாத்த ஆயத்தமானபோது விடுதலைப் புலிகள் அவர்கள் மீது தாக்குதல் நடத்தியதாகவும் அதில் ராணுவ தரப்பில் ஒருவர் பலியானதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனையடுத்து முகாமுக்கு ஹெலிகப்டர் வந்தபோது அதன் மீதும் தாக்குதல் நடாத்தப்பட்டது. பின்னர் ராணுவத்தினர் முகாமுக்கு திரும்பி அங்கிருந்து தொடர்ச்சியாக ஷெல் தாக்குதல் இடம்பெற்றது இதனால் சிறுவன் உட்பட மூவர் காயமடைந்தனர். இச்சம்பவங்கள் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றன.

## உடுத்துறையைச் சேர்ந்த மீனவர்களை காணவில்லை! படகு மட்டும் மீட்கப்பட்டது

உடுத்துறைப் பகுதியிலிருந்து படகு ஒன்றில் மீன்பிடிக்கச் சென்ற இரு மீனவர்கள் மர்மமான முறையில் காணமல் போயுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் சென்ற படகு சில தினங்களுக்கு முன்னர் கடலில் அநாதரவான நிலையில் கண்டு பிடிக்கப்பட்டு ஏனைய மீனவர்களால் கரைக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. படகில் இருந்த வெளியிணைப்பு இயந்திரமும் படகிலிருந்து மர்மமான முறையில் காணமல் போயுள்ளது.

கடந்த சில நாட்களாக இப்பகுதி கடல் பிரதேசத்தில் கடற்படையினரின் கப்பல் ஒன்று நங்கூரமிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இச் சம்பவத்தையடுத்து இப்பகுதி மீனவர்கள் பதட்டமடைந்துள்ளனர்.

## கொடியேற்றம்

(சங்கானை)

பொன்னாலை அருள்மிகு ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ஆலய வருடாந்த மகோற்சவம் இன்று செவ்வாய்க்கிழமை காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

## சாராயம் கடத்தல்

(மட்டுநகர்)

அரச வடிசாலை லொறியில் அக்கரைப்பற்று சென்ற 500 கலன் சாராயம் இனம் தெரியாதவர்களால் கடத்திச் செல்லப்பட்டதாக புகார் செய்யப்பட்டுள்ளது.

## அம்புலன்ஸ் சேவை

யாழ். மாவட்டத்திலுள்ள மக்களுக்கு அவசர வேளைகளில் உதவும் பொருட்டு அம்புலன்ஸ் சேவை ஒன்று நேற்று யாழ்நகரில் அங்குரார்ப்பணம் செயது வைக்கப்பட்டது. இந்த அம்புலன்ஸ் சேவை இருபத்தி நான்கு மணி நேரமும் இயங்கும். அம்புலன்ஸ் சேவை தேவைப்படுவோர் அனைவருக்கும் இதற்கென ஒரு அம்புலன்ஸ் வண்டி தற்பொழுது பயன்படுத்தப்படுகின்றது. 'ரெசோ' அமைப்பினால் ஒழுங்கு செய்யப்பட்ட இந்த அம்புலன்ஸ் சேவையில் தற்பொழுது பதினைந்து முழுநேர தொண்டர்கள் சேவையாற்றுகின்றார்கள். அவசர அம்புலன்ஸ் சேவை தேவைப்படுவோர் யாழ். பழைய பூங்கா வீதியிலுள்ள மாணவர் தொடர்பகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்படுகின்றது.

### யாழ்...

வேண்டுமெனவும் பிரஜைகள் குழு வேண்டுகோள் விடுத்தது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில 'ருக்கிங்' என்பதன் நல்லெண்ணத் தன்மை முற்றாக நீங்கி ஒருவகைச் சித்திரவதை என்ற நிலைக்கு மாறிவிட்ட கடந்தகாலச் சம்பவங்கள் பற்றியும் இவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### சம்பந்தமூர்த்தி ..

வில் பங்குபற்றிய நிகழ்ச்சிகளில் முக்கிய பங்கெடுத்தவர்கள் என்ற வகையில் இம்மாதம் முதலாம் திகதி கடத்தப்பட்ட எட்டுப் பேரில் இவரும் ஒருவராவார்.

கடத்தப்பட்ட எட்டுப்பேரில் சிவலிங்கம் என்ற அதிபர் கொல்லப்பட்டதும், மிகுதி ஆறு பேர் கடந்த வாரம் விடுதலை செய்யப்பட்டதும் தெரிந்ததே.

### நான்காவது...

டைந்து யாழ். அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த மற்றொருவர் நேற்று மரணமானார். கொழும்புத்துறையைச் சேர்ந்த சவிரிமுத்து மததியூஸ் (26) என்பவரே நேற்று மரணமானவராவார். இவரையும் சேர்த்து இச்சம்பவத்தில் பலியானவர்களின் தொகை நான்காக அதிகரிக்கின்றது.

### ஆறு ராணுவம்...

முன்னர் இபபகுதியில் ராணுவத்தினர் நடத்திய தேடுதல் வேட்டையொன்றில் பெரும் தொகையான வெடி மருந்துகளும், குண்டுகளும் மீட்கப்பட்டதாக அரசாங்க அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### ஹெலியிலிருந்து...

யில் நிறுத்தப்பட்டிருந்தன.

சில மணி நேரத்தில் நகர் வழமைக்குத் திரும்பியபோதிலும் சத்திர சந்திப் பகுதியில் தொடர்ந்தும் பதற்ற நிலை காணப்பட்டது. இதனால் அப்பகுதியில் மக்களின் அநாவசிய நடமாட்டங்கள் குறைந்திருந்தன.

### பல்கலைக்......

னால் நடந்து வருவதினால் அங்கு நிர்வாககருமங்கள் தொடர்ந்து பாதிக்கப்பட்டுள்ளன. இதனால் புதிய மாணவரை பதிவு செய்யும் வேலைகள் பாதிப்படைந்துள்ளன. மாணவர் போராட்டம் தொடரும் பட்சத்தில் பல்கலைக்கழக பரீட்சைகளும் ஒத்திவைக்கவேண்டிய நிலை ஏற்படலாமென தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை மாணவர்களின் கோரிக்கைகளை ஏற்பது தொடர்பாக நிர்வாகமும் மாணவர் அவையும் தயக்கம் காட்டுவதாக மாணவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

### தமிழர்...

சட்டத்தரணிகளில் ஒருவரான ஜனாப் அஷ்ரப்பின் வீடும் சேதமாக்கப்பட்டுள்ளது. இவரது வீட்டில் குடியிருந்த டாக்டர் முருகேசு என்பவர் வெளியேறிய பின்னரே வீடு சேதமாக்கப்பட்டதாம்.

அடையாளம் தெரியாத ஒருவரின் சடலம் கல்முனைக் கரையொன்றில் நேற்று ஒதுங்கியதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றிரவும் பொலிஸ் ஊரடங்குச் சட்டம் இங்கு பிறப்பிக்கப்பட்டதாயினும் நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரக்கூடியதாகவில்லையென்று கொழும்பு மூலம் கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

படையினரின் ஆயுதங்கள் சில கோஷ்டிகளால் தாராளமாகப் பாவிக்கப்பட்டதாகவும் கூறப்படுகின்றது.

### இனப்பிரச்சினை......

கூட்டணியினர் புதுடில்லியில் அதிகாரிகளுடன் நடாத்திய பேச்சுவார்த்தைகள் பற்றிய அறிக்கை தம்மிடம் இன்னும் வந்து சேரவில்லை எனவும் கூறினார்.

## பென்ஷன் திகதி

யாழ். பிரதம தபால் நிலையம் மூலமான ஒய்வூதியம் இம் மாதம் 20 ஆம்—28 ஆம் திகதிகளில் வழங்கப்படும் என முன்னரே அறிவிக்கப்பட்டிருந்தது.

இவற்றில் 20ம் திகதி யாழ். தபால் நிலையம் மூலம் பெறுவோரும், மாநகராட்சி எல்லைக்குள் உள்ள உப-தபால் நிலையங்கள் மூலம் பெறுவோரும் இதனைப்பெறலாம்.

28 ஆம் திகதியன்று யாழ். தபால் நிலையம் மூலமான ஓய்வூதியத்தை 20 ஆம் திகதி பெற முடியாது போனோரும், சண்டிலிப்பாய், மண்டைதீவு, அல்லைப்பிட்டி, ஆனைக்கோட்டை, வாதரவத்தை, பிடாரிகோவிலடி ஆகிய உப- தபால் நிலையங்களில் பெறுவோரும் பெற்றுக்கொள்ளமுடியும்.

"ஈழமுரசு" சாயிபாபா அட்வர்டைசிங் அசோஸியேற்ஸ் ஸ்தாபனத்தாரால் 140, நாவலர் வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகப் பகுதியில் 12-8-1986 செவ்வாய்க்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது. தொலைபேசி: 22437